# காஞ்சி

நிறுவனர்: அறிஞர் அண்ணா

7 - 10 - 1973

மலர் : 10 ★ இதழ் : 13


★

உள்ளே......


ஆழமான குழியாம்
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

ஈழத்தமிழரின்
இலட்சியம் வெல்க !
(தலையங்கம்)

★

மு. பி. பா. எழுதிய
'சீனத்துப் பரணி'

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

செய்தித் திரட்டு !


★

## தமிழ்

பாவேந்தர் பாரதிதாசன்

—★—

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும், வெற்றியும் நீயே

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன் எந் நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ

செந்தமிழே! உயிரே! நறுந் தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே

முந்திய நாளினில் அறிவும்இ லாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி

# மு. பி. பா. எழுதிய "சீனத்துப் பரணி"

"வெள்ளையனே வெளியேறு" என விடுதலை வீரர்கள் வெகுண்டெழுந்த காலம்! 'அடிமை வாழ்வை அகற்ற வேண்டும்; ஆனந்த சுதந்திரம் அடையவேண்டும்' என்று அஞ்சா நெஞ்சங் கொண்ட அடலேறுகள் அணிவகுத்த காலம்!

நாட்டிலே மக்கள் போர்க்கொடி உயர்த்திய அதே வேளையில் ஏட்டிலே புரட்சிப்பண் பாடியவர் பாரதியார். பொறுத்திருந்த மக்களைப் பொங்கி எழச்செய்தார்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமை யின் மோகம்"

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி"

என்பன போன்ற அவரது புரட்சிக் கவிதைகள் போர் முரசங்களாக ஒலிக்க ஆரம்பித்தன.

புயலென—பொங்கும் கடலெனப் புறப்பட்டு, விடுதலையே எமது மூச்சு என விண்ணதிர முழக்கமிடும் மக்களிடம், 'அருவியின் எழிலைப்பார்; ஆதவனின் அழகைப்பார்; பாடும் குயிலினம் பார்; ஆடும் மயிலினம் பார்' என இயற்கை எழில் ததும்பும் இன் கவிகள் பாடுவது விழலுக்கிறைத்த நீரேயாகும்.

"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை மாய்த்திட விரும்பான் வாழ்வு மோர்வாழ்வு கொல்.........
தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகி நாயென வாழ்வோன் நமரில் இங்குளனோ?

எனச் சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறியதாகப் பாடப்பட்ட பாரதியின் பாடல், இன்றும் நம்மை வீறுகொண்டு எழச் செய்யும் ஆற்றல் பெற்றுத் திகழ்கின்றது.

தாய்த்திரு நாடாம் நம் பாரத நாட்டைத் தகர்த்திட என்னும் மிலேச்சராய், நம் எல்லையிலே தொல்லை பல கொடுத்தனர் இழி குணச் சீனர். துஞ்சு புலி இடறிய சிகடன் போல—நம் துணிவினையும் தோள் வலியினையும் மதியாது நம் மீது படையெடுத்தனர்'

படை கண்டு தொடை நடுங்கும் பண்பு படைத்தவர் அல்லர் இந்தப் பாரத நாட்டார். என்ப தனை மெய்ப்பிக்கப் போர்க் கொடி உயர்த்தினோம். தாய்மைக்கும் தாய் நாட்டிற்கும் ஆபத்து என்பதை அறிந்த பின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை. 'தாய்பிறன் கைப்படச் சகிப்பவனாகி நாயென வாழ்வோன்' எவனுமில்லை எனும் படி எதிர்த்து நின்றனர் இந்திய வீரர்—எழுச்சி கொண்டனர் இந்திய மக்கள்.

நாடே போர்க் கோலம் பூண்டது. நாட்டின் நிலை உணர்ந்து, மக்களின் உணர்ச்சிகளுக்கு ஏற்ப கவிஞர் பலர் கவிதை மழை பொழியத் தொடங்கினர்.

சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது சுதந்திரம் அடைந்து விட்டதாகவே கருதி

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விடடோம்"

என்று சுதந்திரப் பண் பாடினர் பாட்டுக்கொரு புலவன் பாரதி. எல்லையிலே இழிகுணச் சீனரோடு இந்திய வீரர் போராடிக் கொண்டிருக்கும் போது 'வெற்றி நமதே' என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் 'பரணி' பாடியுள்ளார் கவிஞர் மு. பி. பாலசுப்பிரமணியன்.

தரணியிலே பரணி பாடிய இனம் தமிழர் இனம். கப்பம் செலுத்த மறுத்த கலிங்க வேந்தனைக் கடுஞ்சமரில் வென்றான் கருணாகரத் தொண்டைமான். செய்தி அறிந்து குதூகலம் அடைந்தான் குலோத்துங்கச் சோழன். அந்தக் குலோத்துங்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கலிங்கத்துப் பரணி பாடினார்! பரணிக்கோர் செயங்கொண்டார்.

அஃதுபோல் பாரி புகழும் பண்டித நேருவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு புதுப்பரணி பாடியுள்ளார் கவிஞர் மு. பி. பாலசுப்பிரமணியன். பரணியின் பாட்டு இலக்கண மரபில் மாறு பட்டாரேனும் 'உணர்வு' இலக்கணத்தில் மாறுபாடு சிறிதும் இல்லாத வகையில் 'சீனத்துப் பரணி'யினைப் படைத்துள்ளார். "தமிழ்த்தாய் வணக்கம்" தொடங்கி "வரவேற்கும் வனிதையர்" ஈறாகப் பன்னிரண்டு பகுதிகளாக இந்நூலை ஆக்கியுள்ளார்.

தமிழர்களின் நெஞ்சத்தில் வலிவை
ஊட்டித் தன் மானப் பால்
கொடுத்து வளர்க்கும் தாயே...
வணங்குகிறேன்."

எனத் தமிழ்த் தாய் வணக்கத்துடன் தொடங்கும் இப்பரணி நூல்.

'பண்டிதர் பெருமை கூறும்
பரணியை முடிக்கின்றேன் நான்
எண்டிசைப்புகழ் மணக்கும்
என் தமிழ் அன்னை வாழ்க'

எனத் தமிழ் அன்னை வாழ்த்துடன் முற்றுப் பெறுவது பொருத்தமாக இருப்பதுடன் கவிஞரின் உள்ளத்தில் புதுப் புனல் என பொங்கி எழும் தமிழ்ப் பற்றினை வெளி படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

தில்லி மாநகருக்கே இதயம் போலத் திகழ்கின்ற பாராளு மன்றம். அந்த மன்றந்தன்னில் வீற்றிருக்கும் பண்டித நேருவினை

"எப்போதும் புன்முறுவல் உதடு பூக்கும்
இன்மொழியாம் தேன்துளியை
வாயும் சிந்தும்
ஒப்பில்லா புகழ் ஒளியில் உடலும் மின்னும்
உத்தமரின் பார்வையிலே
அன்பு பொங்கும்'

(4-ஆம் பக்கம் பார்க்க)

கு. கணேசன், எம்.எஸ்சி.,

# “காஞ்சி”

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 7—10—73 | இதழ் 13


# ஈழத்தமிழரின் இலட்சியம் வெல்க!

தரணியிலே ‘பரணி’பாடிய இனம், தமிழ் இனம். காசினியில் உள்ளோரெல்லாம் ‘காட்டு மிராண்டி’களாக வாழ்ந்த காலத்திலேயே, கட்டுக் கோப்பான வாழ்வைக் கண்ட இனம், கன்னித் தமிழ் இனம்.

வையத்தில் உள்ளோர் வாழத்தெரியாமல் வாழ்ந்து வதைபட்டுக்கொண்டிருந்த காலத்தில், வகையோடும் வளமோடும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய ஒரே இனம், தமிழ் இனம்.

காடு திருத்துவதில், ‘நாடு’ ஆக்குவதில் ‘தனக்கு நிகர் தானே’ எனத் தரணியில் திகழ்ந்த தனித் தன்மைபடைத்த இனம், தமிழ் இனம்.

“கடல் கடந்தான்; கடாரம் கொண்டான்” என்னும் கீர்த்தி மிக்க வரலாற்றைக்கொண்ட நேர்த்தி மிக்க இனம்’ தமிழ் இனம்.

‘ஈழம் சென்றான்; எதிர்த்தவரை வென்றான்; எத்தனையோ பேரைச் சிறைப்பிடித்தான்; முத்தனைய சரிதம்தனைப் படைத்தான்’ என்னும் புகழுக்குரிய நிலையில் புவிபோற்ற வாழ்ந்த இனம்தான், நம் தமிழ் இனம்! இரத்தத்தை வேர்வையாக்கி இதயத்தை உழைப்பாக்கி ஈழத்தையே பொன்கொழிக்கும் பூமியாக்கி, பூரித்த இனம் நம் தமிழ் இனம்!

அன்று, மலைத்தோட்டங்களிலெல்லாம் மாடாக உழைத்த இனம்—இன்று, ஓடாக ஒடுங்கி, சிங்கள ஓநாய்களுக்கு நடுங்கி—அடங்கி வாழவேண்டுமாம்! விந்தையினும் விந்தை! கேட்டால் நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிக்கின்றது!

சென்ற ஆண்டுதான் ‘புது அரசியல் சாசனம்’ ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது, திருமதி பண்டார நாயகா அரசினரால்! அதன் மூலம் “ஸ்ரீ லங்கா!’ தோன்றியுள்ளது பாழும் ‘ஸ்ரீ’ என்று தோன்றியதோ அன்றே தமிழரின் உரிமைக் குரல் வளையை நெரிக்கும் முயற்சியும் தொடங்கிவிட்டது.

“சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்” ன்று பண்பாடி மகிழ்ந்தோம்!

‘பாலம்’ இருக்கிறது! அந்தோ! தமழரின் ‘ஓலமும்’ கேட்கிறது!

‘ஆலம்’ விழுதுபோல் அவனி முழுதும் பரந்து கிடக்கும் ‘மூல’ இனமே! உனக்கா இந்தக் கதி? என்னும் அவல வினா நம்மை வாட்டி வதைக்கிறது.

இந்தியெனும் ஒற்றை ஆட்சி மொழித் திட்டத்தை எதிர்த்து உரிமை முழக்கம் செய்து வருபவன், **‘இந்தியத்’ தமிழன்!**

‘சிங்களம்’ எனும் ஒற்றை ஆட்சி மொழியை எதிர்க்க உரிமைக் குரல் கொடுப்பவன், **‘ஈழத்’** தமிழன்.

தமிழா! எங்குமே சிறுபான்மையினனாகச் சித்ர வதைப்பட வேண்டியதுதான் உன் தலை எழுத்தா?

காந்தி பிறந்த நாள் அன்று இலங்கையில் தமிழர் வாழ் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் திட்ட மிட்டபடி சட்ட மறுப்பு அறப்போர் முழு வெற்றி பெற்றுள்ளது. அதுவே நமக்கு முழுத் திருப்தியையும் அளிக்கிறது.

முன்பு தமிழர்களுக்குள் பல்வேறு நிலைமைகள்! சிங்களவர்களின் ‘பிரித்தாளும்’ சூழ்ச்சிக்குப் பலியாகிக் கிடந்த தமிழர்கள்கூட, இன்று ‘விழித்துக்’ கொண்டுள்ளனர்.

தமிழர் அனைவரும் ‘ஓரணி’யில் திரண்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களின் இதய நாயகர்—செந்தமிழ் இனங்காக்கச் சீறிக் கிளம்பியுள்ள சிங்கம், சிங்களவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழும் தமிழர் தலைவர் **செல்வநாயகம்,** தமிழ் இனத்தவரை ஒற்றுமைப்படுத்துவதில் முழுவெற்றி பெற்றுள்ளார்.

துணிவான தமிழர்தம் அந்நடவடிக்கையினைக் கண்டு, துணுக்குறுகிறது, சிங்கள அரசு!

தமிழர் நலன்பேண தமிழ் மொழியின் நிலை காக்க—திட்டமொன்றை வகுத்து, தீரமுடன் செயல்பட்டு வருகிறது, ஒருங்கிணைந்த தமிழர் கட்சி!

வாக்குரிமையுள்ள தமிழர்களைக்கூட, இரண்டாந்தரக் குடிமக்களாக மாற்றும் புது அரசியல் சட்டம் தேவையில்லை;

சிங்களத்திற்கு இணையாகத் தமிழ் மொழியை மதிக்கத் தவறிய புது அரசியல் சட்டத்தை நாங்கள் மதிக்க மாட்டோம்; அதை மாற்றும் வரை போராடுவோம், என்ற உள்ள உறுதியோடு போராடும் ‘ஈழத்தமிழர்களின் இலட்சியம் வெல்க!’ என வாழ்த்துவோம்!

ஈழத்தமிழ் இனமே! உன் இலட்சியம் வெற்றி பெற்றே தீரும்! அதை அலட்சியம் செய்பவர் யாராக இருந்தாலும், காலத்தின் கட்டாயத்திற்கும் பதில் சொல்லியே தீரவேண்டும்.

**—மணிவேந்தன்.**

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் பண்டித நேருவின் பாராளு மன்றப் பேச்சு 'பரணி' நூலின் முன்னோடியாகத் திகழ்கின்றது.

"குதிரைக்குக் கொம்புண்டாம்
என்றால் அந்தக்
குள்ள மனச் சீனனுக்கும் மூளை உண்டு
புதிருக்குள் புதிர்போடும் சீனன் தன்னைப்
போரிட்டு மாய்த்திடலே
சபதம் ஏற்போம்"

என்றெல்லாம் நேரு மகன் நிகழ்த்தும் வீரவுரை நம் நெஞ்சத்தைக் கவருவதாக அமைந்துள்ளது.

ஆதிக்க வெறி பிடித்தலையும் சீன நாட்டினை மிக அழகாகச் சித்தரிக்கிறார் கவிஞர்.

"தென் கொரியாப் போரினிலே தோற்றநாடு
திபெத்தின் மேல் ஆதிக்கம் செய்தநாடு
பன்முறைகள் போர் தொடுத்தும்
தோல்வி கண்டு
பார்மோசாதனை வெறுத்த சீனர் நாடு"

அத்தகைய சீனநாட்டினை ஆட்டி வைக்கும் ஆணவத்தின் திருவுருவ மாய்க் காட்சியளிக்கும் ஆந்தை விழியன் மாசேதுங்கினை

"கன்னல் மொழிப் பேச்சாலே
மயங்கச் செய்வான்
கத்தியினை மறை முகமாய்ப்
பாய்ச்சப் பார்ப்பான்!"

என நமக்கு 'அறிமுகம்' செய்து வைக்கிறார்.

"சிங்காரத் திபெத் நாட்டைப்
பெற்றதனைப்போலச்
சின்னதொரு சிக்கிமுடன் நேபாளம் பூடான்
சிங்கப்பூர் பாகிஸ்தான் எழில்பர்மா இன்னும்
சிறுநாடு பலவும் நாம் பெற்றுக வேண்டும்."

என்பதுதான் மாசேதுங்கின் 'மாபெரும்' திட்டம்.

மாசேதுங்கின் மண்ணாசை வெறியினை மாய்த்திட வேண்டும். தாய்த்திரு நாட்டின் மானத்தைக் காத்திட வேண்டும் என்ற மான உணர்ச்சியுடன்—மற உணர்ச்சியுடன்,

"கள்ளன் போல வந்தான்—சுடு
காடு போக வந்தான்
வெள்ளம்போலச் செல்வோம் -அந்த
விணன் தன்னைக் கொல்வோம்."
"இந்தியத்தைக் காப்போம்—வட
எல்லையை நாம் காப்போம்
தந்தை நாட்டைக் காப்போம்—நம்
தாயின் மானம் காப்போம்."

என வானொலியில் முழங்குகின்றார். பண்டிதர் விடை கொடுக்க பாரத் படை புறப்பட்டது.

"துடித்தெழும் உள்ளத்தோடு
துரோகியாம் சீனன் தன்னைப்
பொடிப்பொடியாக்கச் சென்றார்
புண்ணிய நாட்டு வீரர்."
"விமானம் இறைந்திடவிண்ணும்
அதிர்ந்திட
வேகம் மிகுந்திட வானிலே
விமானம் பறந்திடவீரரும் பறந்தனர்
வீணராம் சீனரை ஓட்டவே."

எனப் பாரதப் பட்டாளம் பாய்ந்து சென்ற பான்மையினைப் பாங்குடன் பாடியுள்ளார்.

சீனனின் சிறுமதி கண்டு நாடே சீறி எழுந்தது. இந்திய மக்கள் அனைவரும் எழுச்சி கொண்டனர். அந்நியன் புகுந்த நேரத்தில் அழகு செய்யத் தங்கம் எதற்கு எனத் தாய்மார்கள் எண்ணினர். தங்கள் நகைகளையெல்லாம் தாய் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குக் கொட்டிக் குவித்தனர்.

"பொன்னைத்தான் கொடுத்திடுவீர்
என்றார் நேரு
பொன்னாட்டின் மக்களெல்லாம்
பொன்னினோடு
தன்னைத்தான் கொடுத்திடவும்
முடிவு செய்தார்
தாயகத்தின் சுதந்திரமே
மூச்சாம் என்றார்."

வேங்கையென வீறுகொண்டு எழுந்த நமது வீரர்கள்

'சுட்டெரிக்கும் காட்டுத்தீ
வேகத்தோடும்
சுழன்றடிக்கும் புயற்காற்றின்
ஆற்றலோடும்
எல்லையிலே தொல்லை
கொடுத்த இழிகுணச்
சீனர்களை எதிர்த்து நின்றனர்'
"கார்மேகம் தவழ்ந்த
விளையாடுகின்ற
காட்சியினைக் கொண்டிருக்கும்
பனிமலைமேல்
போர்மேகம் தவழ்ந்து
விளையாடிற்றம்மா!"

பூவுலகம் இதுகேட்டுப் புலம்பிற்றம்மா!' மானத்திற்கும் மண்ணாசைக்கும் ஏற்பட்ட போர் அல்லவா?

"துப்பாக்கி ஓசையுடன்
பீரங்கி ஓசை
தொலைவானில் பறக்கின்ற
விமானங்கள் ஓசை
தப்பாத குண்டுகளும்
வெடிக்கின்ற ஓசை"

எனப்பல வகைப்பட்ட ஓசைகள் இந்த நானிலத்தையே நடுநடுங்கச் செய்தது.

இறுதி வெற்றி இந்தியருக்கே.

"இந்திய வீரர் வென்றார்
இழிகுணச் சீனன் தோற்றான்
தந்தையர் நாட்டு வீரர்
தன் மானம் மகிழ ஆர்த்தார்!"

பாட்டுடைத் தலைவரான-பரணிப் புகழுக்கு உரியவரான,

"நேரு உள்ளம் மகிழவே
நீசச் சீனன் அழியவே
மேரு மலையின் மீதிலே
மேன்மை புகழை நாட்டினர்"

ஆம்! இந்திய வீரர்களுக்குக் கிடைத்த இணையில்லா வெற்றி என்ற எக்களிப்புடன் பாடுகிறார் கவிஞர்.

வீரச்சுவை படைப்பதில் வெற்றி கண்ட கவிஞர் ஈரச்சுவை படைப்பதிலும் பெரு வெற்றியினை ஈட்டியுள்ளார். வாகை சூடி வரும் வீரர்களை வரவேற்கின்ற வனிதையரின் வனப்பே வனப்பு.

வெற்றிப் பண்பாடிய வீரர்களுக்கு விடுமுறை வந்தது. வீடுகளை நோக்கிச் செல்கின்றார்கள்.

"சுற்றத்தார் நலங்காணத்
துணைவியரைக் காணச்
சுவையூறும் பூவிதழின்
சுகங்காணச் சென்றார்."

அது மட்டுமா?

"பஞ்சணையில் வஞ்சியுடன்
கொஞ்சிடவே சென்றார்
பள்ளியறைப் பாடங்கள்
படித்திடவே சென்றார்.

வீரர்களைக் கண்ட ஊராரின் உள்ளம் உவகைக் கடலில் மிதக்கின்றது. மானம் காத்த மாவீரா! வருக, என மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். எங்கும் மகிழ்ச்சி, எங்கும் இன்பம்.

"வாகை மலர் பெற்றவனே!
வரிப்புலியே! வாவா!
வையத்தில் நேரு
புகழ்காத்தவனே! வா வா!

(14-ஆம் பக்கம் பார்க்க)

# தம்பி


ஆழமான குழி! மிகமிக ஆழமான குழி-ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமல்ல, 67000 அடி ஆழமான குழி தோண்டப்போகிறார்களாம். சொல்லிவிட்டார்கள்! எவ்வளவு கஷ்டம் பாவம். இவ்வளவு ஆழமான குழி தோண்ட என்று எண்ணும்போதே எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

பரிதாபம் காட்டுவது இருக்கட்டும் எதைப்பெற இவ்வளவு ஆழமான குழி தோண்டுகிறார்கள், விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஏதாவது அரிய பொருள் அத்தனை அடி ஆழத்திலே புதையுண்டு கிடக்கிறது என்பதற்காகவா என்று கேட்கிறாயா! தம்பி! அதற்காக அல்ல. நமக்காக, கழகத்தைப் போட்டுப் புதைக்க!! 67000 அடி ஆழக் குழி தோண்டிப் போட்டுப் புதைக்கப்போகிறோம், தி. மு. கழகத்தை 1967ம் ஆண்டு என்று, திருச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள்.

என்ன செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள்-ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள், சமுதாய நலத்திட்டம் என்கிறார்கள், வட்டார வளர்ச்சித் திட்டம் என்கிறார்கள், இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்—நாட்டிலே ஏழை மக்கள் வாழ்விலே பாராட்டப் படத்தக்க விதமான முன்னேற்றம் எதையும் காணாததால் மனம் நொந்து நீ கேட்கிறாய் பலமுறை, என்னதான் செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ் காரர்கள்; என்ன செய்யப்போகிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்றெல்லாம். அவர்கள் கூறிவிட்டார்கள் திருச்சி மாநாட்டில், என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை; ஆழமான குழிதோண்டப் போவதாகச் சொல்லிவிட்டார்கள்; 67000 அடி ஆழம்.

என்ன அண்ணா! நம்மைப் போட்டுப் புதைக்கக் குழி தோண்டப் போவதாக அவர்கள் பேசுகிறார்கள் அத்தனை ஆணவத்துடன்; அதைக் கேட்டு நீ பதறாமல் துடிக்காமல், மகிழ்ச்சியுடன் பேசுகிறாயே என்று கேட்கத் தோன்றும். நான் பதறாததற்கும் துடிக்காததற்கும் காரணம் இருக்கிறது.

## ஆழமான குழியாம்



67000 அடி! கவனமிருக்கட்டும்! அத்தனை ஆழமான குழி! ஏன்? அவர்களுக்கு அவ்வளவு அச்சம், அத்தனை ஐயப்பாடு! சாதாரண ஆழமுள்ள குழி, ஒரு ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி தோண்டினால் போதாது, அதிலே போட்டுப் புதைத்தால் பயனில்லை, மீண்டும் எழுந்து வந்துவிடக்கூடும், மிக அதிகமான ஆழம் தோண்டவேண்டும் என்று தோன்றுகிறதே தம்பி! அவர்களுக்கு; அது எனக்கு நமது கழகம் எத்தனைப் பெரியது, எதிரிகளை எந்த அளவுக்கு அச்சப்படுத்தி வைத்திருக்கிறது என்பதை அறியச் செய்கிறது. அது எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சி உணர்வைக்கூடத் தருகிறது. தி. மு. கழகம் சாமான்யமானதல்ல, இந்தியாவை பத்தொன்பது ஆண்டுகளாகக் கட்டி ஆண்டு வரும் காங்கிரஸ் கட்சியினர், இந்தக் கழகத்தைப் புதைத்து குழியில் போடவேண்டுமென்றால், ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழிபோதாது, 67000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது என்பதை எடுத்து காட்டுகிறது அவர்களின் பேச்சு! கழகத்தின் வளர்ச்சியின் அளவை நாடு உணர்ந்துகொள்ளவும் அந்தப் பேச்சு துணை செய்கிறது.

கழகமா? அது எங்கே இருக்கிறது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அதைப் பொதுமக்கள் சீந்துவார்களா என்று கூறிய காலம் போய்,

கழகமா? பத்துப்பேர் கூச்சலிடும் இடந்தானே என்று பரிகாசம் பேசிய காலம் போய்,

கழகமா? கொஞ்சம் துள்ளுகிறது நாலு நாளில் தன்னாலே அடங்கிவிடும் என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உட்குழப்பத்தாலே உருக்குலைந்து போய்விட்டது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உடைபட்டுப் போய்விட்டதே! இப்போது அதிலே என்ன இருக்கிறது!! என்று பேசிய காலம் போய்,

கழகமா? நாங்கள் மூச்சுவிட்டால் காற்றிலே பறக்காதா என்று ஏளனம் செய்த காலம் போய்,

கழகமா? எங்கள் கோபப் பார்வையாலேயே அதனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட மாட்டோமா? என்று பேசிய காலம் போய்,

கழகமா? எங்களுக்கு அது ஒரு பொருட்டாகுமா! என்று அலட்சியம் காட்டிப் பேசிய காலம் போய்,

கழகமா? அதை 67000 அடி ஆழமுள்ள குழி தோண்டி அல்லவா புதைக்கப் போகிறோம் என்று பேசும் காலம் வந்திருக்கிறதே!!

இது எதைக் காட்டுகிறது? கழகத்தை அலட்சியப்படுத்தியவர்கள், அது தன்னாலே உருக்குலைந்து போகும், உடைப்பட்டுப் போகும் என்று எண்ணினவர்கள், கழகம் சாமான்யமல்ல, அதைப் போட்டுப் புதைப்பதானாலும், சாதாரணக் குழி போதாது, மிகமிக ஆழமான குழிவேண்டும் என்று கூறிட வேண்டிய அளவுக்குக் கழகம் வளர்ந்து, அவர்களைக் கலங்கிடச் செய்கிறதே, அது தம்பி! எனக்கு ஒருவித மான மகிழ்ச்சியே கூடத் தருகிறது!

காலஞ் சென்ற சத்தியமூர்த்தி சொல்லிக் கொண்டிருந்தார், ஜஸ்டிஸ் கட்சியை 5000 அடி ஆழத்தில் குழித்தோண்டிப் புதைக்கப் போகிறேன் என்று.

இன்றையக் காங்கிரஸ்காரர்கள் அவரை மிஞ்சி விட்டார்கள்; குழி தோண்டுவதில்! வாயால்!! 67000—அடி ஆழக் குழியாம்.

அவ்வளவுகடினமான வேலை செய்யவேண்டும் என்றாகிவிட்டது, கழகம் பெற்றுள்ள வளர்ச்சி.

ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—கோபம் கண்ணை மறைக்குமாமே, அதனால் என்று எண்ணுகிறேன்—67000 அடி ஆழக் குழிதோண்டிக் கழகத்தைப் புதைக்கத்தக்க வல்லமை உள்ளவர்களானால், இந்த வீரர்கள் கழகம் இந்த அளவு வளர்ந்ததே, என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் கழக வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை!!

கழகம் இவர்கள் கண்முன்பாகத்தானே வளர்ந்தது; வேறு எங்காவது ஓரிடத்திலே கட்டுப்பட்டு இங்கு திடீரென ஒரு நாள் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டதா? இல்லையே! இவர்கள் இப்போது இருப்பது போலவே அறிவாற்றலுடன், வீராவேச உணர்ச்சியுடன் இங்கேதான் இருந்து கொண்டிருந்தார்கள், நாம் வளர்ந்தபோது. ஏன் தடுக்க முடியவில்லை, கழக வளர்ச்சியைத் தடுத்திட முடிந்திருந்தால் இன்று இத்தனை ஆழமான குழி தேவைப்பட்டிருக்குமா! பாவம்! 67000 அடி ஆழமல்லவா தோண்டப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் இத்தனைக் கஷ்டம்! தும்பைவிட்டுவிட்டு வாலைப்பிடிப்பது என்பார்களே, அந்தப் போக்கா?

இப்போது இருப்பதுபோலவே அவர்களிடம் எல்லாவல்லமையும் இருந்தது! பிரச்சாரம், பணபலம், அதிகாரபலம், எல்லாம்! இப்போது இருப்பது போலவே அப்போதும். இவர்களே ஆளவந்தார்கள்! இருந்தும்? கழக வளர்ச்சியைத் தடுத்திட முடிந்ததா? இல்லையே! கழகம் வளர்ந்து, இவர்களுக்கு மிரட்சி அதிகமாகி, ஆழமான குழி! மிக ஆழமான குழி! என்றல்லவா அலறுகிறார்கள்.

இவர்கள் வேறு முக்கியமான வேலையாக—அமெரிக்காவைச் சீர் செய்ய—புரட்சியால் இன்னல் அடைந்த ரஷியயாவுக்கு இதம் செய்யச் சென்று பல ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டதுபோலவும், இவர்கள் இங்கே இல்லாத நேரமாகப்பார்த்து நாம் வளர்ந்தது போலவும், இவர்கள் இங்கே இருந்திருந்தால் நம்மை வளரவிடாமல் அப்பொழுதே செய்து விட்டிருக்க முடியும் என்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள்! இவர்கள் அவ்வளவு

பேரும், இங்கே விழித்துக்கொண்டும் வீருப்புப்பேசிக் கொண்டும் இருந்து வந்த நேரத்திலேயேதான், கழகம் வளர்ந்தது.

67000 அடி ஆழமான குழி தோண்டப் போவதாகப் பேசும் இந்த வல்லவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

வளர்ந்தால் வளரட்டும் அது நம்மை என்ன செய்யும் என்று இருந்துவிட்டார்களா என்ருல் அதுவும் இல்லையே! அப்போதும், இதே விதமான பேச்சு.

ஒழித்துக் கட்டுவோம்

குழி தோண்டிப் புதைப்போம்

கூண்டோடு தொலைப்போம்

பூண்டோடு ஒழிப்போம்

என்ற முழக்கங்கள்; உருட்டல் மிரட்டல்கள்!

இன்றைய இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் அன்று சொன்ன திருவாய் மொழி தெரியாதா! கழகத்தாருடைய கை கட்டைவிரலை வெட்டிவிடுவோம் என்பதல்லவா!!

எத்தனை விதமான எதிர்ப்புகளை,

எத்தனைக் கலவரங்களை மூட்டிவிட்டனர்!

என்னென்ன விதமான வழக்குகளைத் தொடுத்தனர்;

எத்தனை தடி அடி! சிறைவாசம்!

சதிச் செயல்களுக்குத்தான் குறைவா?

தூத்துக்குடி சாமியிலிருந்து வண்ணைப் பாண்டியன் வரையில் கொலை செய்யப்படவில்லையா!

ஒடித்த கொடிமரங்கள் கொஞ்சமா! கொளுத்திய கொடிகள் கொஞ்சமா!

இட்டுக் கட்டியதும் இருட்டடிப்பு நடத்தியதும்-திறமையுடன் அல்லவா!

கழகத் தலைவர்களை ஏசிப் பேசிட வசை மொழிகள் சாதாரணமாகவா! தனித் தரமுள்ள நாராச நடையிலல்லவா!!

பிறப்பு வளர்ப்பு, குடும்பம் கொடிவழி என்ற எதையாவது விட்டார்களா!

மண்ணுசைக்காரன், பெண்ணுசைப் பேயன் பொன்னுசை பிடித்தோன் என்றெல்லாம் கழகத்தின் முன்னணியினரை ஏசியது கொஞ்சமா!

கூத்தாடிகள்!— என்றெல்லவா இகழ்ந்தனர்—இன்று 'கலைஞர்களை' நாங்களும் காட்டுகிருேம் என்று பேசிடும் இந்த குணாளர்கள்!

எத்தனை விதவிதமான எதிர்ப்பு மாநாடுகள், ஒழிப்பு மாநாடுகளை நடத்திக் காட்டினர்.

உள்ளூர் சரக்கு போதாது என்று வெளியூர் சரக்குகளை வேண மட்டும் வரவழைத்து கூவிக் கூவி விற்ருர்களல்லவா!

கருப்புக் கொடியா! காட்டுபவன் கரத்தை ஒடி!! என்ற அகிம்சைப் பேச்சு வழிந்ததே!

எதைச் செய்யாமல் விட்டார்கள்!

எல்லாம் செய்து பார்த்து, கழகம் வளருவதைத் தடுக்க முடியவில்லை.

வெட்டவெளியில் இருந்த கழகம் சட்ட சபைக்கே வந்துவிட்டது!

சட்டசபையிலும், கழகம் அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகி விட்டது!

இந்த வளர்ச்சியைத் தடுத்திட முடியாத இதே வல்லமைசாலிகள்தான், இப்போது 67000 அடி ஆழமான குழி தோண்டப் போகிருர்களாம்!

நாட்டிலே சில ஆயிரம் புதுப் பணக்காரர்களை உண்டாக்கி வைத்துக் கொண்டிருப்பதால், கேட்ட பணம் கிடைக்கிறது என்ற ஒரு தைரியம் தவிர, மக்களின் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது எமது ஆட்சியின் திறமையால், ஆகவே மக்களின் பேராதரவு எமக்கே உண்டு என்று பேசிடும் தைரியமா இன்று அவர்களுக்கு இருக்கிறது?

மக்கள் மனம் மகிழ்ந்திடும்படியான ஆட்சி நடத்தியிருந்தால் எதிர்க் கட்சிகள் இந்த அளவு வளர்ந்திருக்க முடியுமா!

குழி தேண்ன்டுகிருர்கள் என்றே வைத்துக் கொள்வோம் தம்பி! ஆழமான குழி! அதைப் பார்த்து மக்கள் கேட்கமாட்டார்களா?

நாடாளும் நல்லவர்களே! எதற்காக இத்தனை ஆழமான குழி தோண்டுகிறீர்கள்?

இதுவா? இது, தி. மு. கழகத்தைப் போட்டுப் புதைக்க!

இவ்வளவு ஆழமான குழி தேவைப்படுகிறது என்ருல், தி. மு. கழகம் பெரிய கட்சி என்று தெரிகிறதே, அப்படியா? அப்படியாளுல், எப்படி அது இந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது?

எப்படியோ வளர்ந்துவிட்டது! இப்போது இந்தக் குழியில் போட்டுப் புதைத்துவிடப் போகிருேம்.

ஏன்? தி. மு. கழகம் என்ன கெடுதல் செய்தது? குழியில் போட்டுப் புதைத்திட வேண்டிய விதமான கெடுதியாருக்கு என்ன செய்தது?

உனக்குத் தெரியாது! இது மிக மிக கெட்ட கட்சி! ஆமாம் பொல்லாத கட்சி! நாட்டையே நாசமாக்கும் கட்சி!

அந்த விவரம்தான் கேட்கிருேம், என்ன செய்து விட்டது கழகம்? ஊர் மக்கள் சொத்தைச் சுருட்டிக்

கொண்டதா? ஆயிர மாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்ததா? கள்ளமார்க்கட்காரனுடன் குலவிற்று? கொள்ளை இலாபக்காரனிடம் குலவிக் கிடந்ததா? ஊழல் ஊதாரித்தனம் நடத்திற்று?—என்ன செய்தது சொல்லுங்கள், கேட்போம்...?

இப்படிப் உரையாடல் இருந்திடின், குழி தோண்டக் கிளம்பிடும் குணாளர்கள் என்ன பதில் கூறுவர்.

> போ! போ! உனக்கொன்றும் தெரியாது. நீ மேற்கொண்டு ஏதாவது பேசினால் உன்னையும் இந்தக் குழியில் போட்டுப் புதைத்து விடுவோம் என்றுதான் பேசுவர்.

ஆனால் பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள்?

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குக் கிலியை மூட்டிவிட்டு விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் விழிப்புடன் இருந்துகொண்டு, காங்கிரசாட்சி ஆகாத சட்டம் கொண்டு வந்தால் எதிர்க்கிறது; அநியாய வரி போட்டால் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசாட்சியிலே நெளியும் ஊழலை ஊதாரித்தனத்தைக் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மக்களிடம் வாங்கிடும் வரித்தொகை எவ்வளவு, மக்களுக்குச் செய்திடும் வசதி எந்த அளவு, காட்டு கணக்கு என்று துணிந்து காங்கிரசைக் கேட்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், எத்தனையோ பேர் நமக்கென்ன என்றும், நம்மால் ஆகுமா என்றும் வாய் மூடிக்கிடந்திடுவதைக் கண்ட பிறகும், நமக்கு என்ன நேரிட்டாலும்சரி, நம்முடைய உள்ளத்துக்குச் சரியென்று பட்டத்தைச் சொல்லியாக வேண்டும் என்ற தூய்மையுடன் பணியாற்றுகிறது.


தாம்பூலத்திற்குச் சிறந்தது





திராவிட முன்னேற்றக் கழகம், மொழிக்காக, கலை வளத்துக்காக, தொழில் முன்னேற்றத்துக்காக, அந்த முன்னேற்றம் முதலாளிகளிடம் சிக்கிவிடாமல் சமுதாயத்துக்குப் பரவுவதற்காகப் பாடுபடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், முதலாளிகளுக்கும் காங்கிரசாட்சிக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள எழுதாத ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டுகிறது.

குட்டுகளை உடைக்கிறது! கொடுமைகளை எதிர்க்கிறது! ஆட்சியில் உள்ள அக்ரமங்களை அம்பலப்படுத்துகிறது.

அந்த எரிச்சல், காங்கிரசுக்கு! நமது ஆதிக்கத்துக்குக் கழகம் உலை வைக்கிறதே என்ற எரிச்சல்.

பட்டம் உண்டு, பதவி உண்டு, பர்மிட் உண்டு, லைசென்சு உண்டு; பத்திரிகைகளில் நிறைய விளம்பரம் உண்டு, வருக! பெருக! என்று அழைத்ததும் ஓடோடி வந்து நம்மோடு கூடிக்கொண்டார்கள் பலப் பலர், இந்த கழகத்துக்காரர்கள் மட்டும், பசப்பு கண்டு மயங்கமாட்டோம், பாதை தவற மாட்டோம் என்று இருக்கிறார்களே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்புடன் இருந்து வருகிறார்களே, இவர்களைத் தொலைத்தாலொழிய நமது ஆதிக்கம் நிலைக்காது, நீடிக்காது என்ற உணர்ச்சி.

இதன் காரணமாகத்தான், காங்கிரசாட்சியினர் கழகத்தைப் புதைக்க வேண்டும், அதற்காக ஆழக் குழி தோண்டவேண்டும் என்று எண்ணுகிறார்கள்—என்று பேசிக்கொள்ள மாட்டார்களா!

இது அக்ரமம்! நமக்காக, நாட்டுக்காகப் பாடுபடும் கழகத்தை நாம் காத்திட வேண்டும் துணை நிற்கவேண்டும் என்று பொதுமக்கள் எண்ணிடத்தான் செய்வார்கள்.

மக்களுக்கு வயிறாரச் சோறு கிடைக்க வழி செய்திடுக!—என்று கேட்டிடும் கழகத்தை, ஏழை மக்களே! எலி தின்று உயிர் பிழைத்துக் கொள்க என்று பேசிடும் காங்கிரஸ், ஒழித்திட முனைவதா! அதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா! நமக்காக வாதாடும் கழகத்தை, நம்மை வதைத்து வரும் வன்கணாளர் குழி தோண்டிப்புதைப்போம் என்று கிளம்புவதா, நாம் வாளாயிருப்பதா—என்று பொது மக்கள் எப்படி எண்ணிடாமலிருந்திட முடியும்.

காங்கிரசாட்சியினர் இப்போதுபோல இறுமாந்து பேசிய ஒவ்வொரு கட்டத்திலும், அவர்களின் முயற்சி பலன்தராமல், கழகம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து வந்ததன் காரணமே இதுதான்—பொது மக்களின் நல்லாதரவு!!

தம்பி! அவர்கள் குழி தோண்டுகிற வேலையிலே இருக்கட்டும்—ஆழமான குழி!!

நாம், மக்களிடம் சென்று உண்மை நிலைமையை எடுத்துக் கூறிடும் பணியிலேயே நன்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும்.

தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைக்கிறதே கழகம் என்ற எரிச்சலில், காங்கிரசார் ஆத்திரம் கொள்ளத் தான் செய்வார்கள்; கழி சுழற்றுவார்கள், விழி பெயர்த்திடுவேன் என்பார்கள், குழி தோண்டிப் புதைப்பேன் என்பார்கள்.

பாவிப்பயல்! இன்னும் தூங்கவில்லையே என்று நள்ளிரவு கன்னம் வைத்திட வருபவன், வீட்டுக் குடையானைச் சபித்திடத்தான் செய்வான்.

சனியன் இன்னும் வெளியே போய்த் தொலைக்க வில்லையே என்று கள்ளக் காதலனுக்காக ஏங்கிடும் நாயகி கை பிசைந்து கொள்கிறாள் என்று கதையில் எழுதுகிறார்கள் அல்லவா!

அதுபோல இவர்கள், ஓயமாட்டேன் என்கிறார் களே! விடாது எதிர்த்து வருகிறார்களே! படிப்படி யாக முன்னேறுகிறார்களே! வளர்ச்சி இருந்தபடி இருக்கிறதே!—என்று எண்ணி மனம் புழுங்குகிறார் கள், அவர்களுக்குத் தோன்றத்தான் செய்யும், கழகத்தைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று.

அவர்களின் ஆத்திரப் பேச்சு, நமது பணி ஆற்ற லுடன் நடந்து வருகிறது என்பதற்குச் சான்றளிக் கிறது!

நாம் ஓயாமல் உழைத்து வருகிறோம் என்ப துடன், மேலும் உழைத்திட உறுதியும் உற்சாகமும் இருக்கிறது என்பதை நாம் உணருவதற்கு அவர் களின் உருட்டல் மிரட்டல் பேச்சு நமக்குப் பயன்படுகிறது.

அவர்கள் குழி தோண்டியபடி இருக்கட்டும், நாம் மக்களுக்கு நல்வழி எது என்பதனை எடுத்துக் காட்டியபடி இருப்போம்.

அவர்கள் தங்கள் ஆதிக்கம் பறிபோகக் கூடாது என்று பதறுகிறார்கள், அதனால் அவர்கள் பேச்சிலே ஆத்திரம் கொந்தளிக்கிறது.

நாம் மக்களுக்கு ஒரு நல்லாட்சி அமைய வேண்டும் என்பதற்காகப் பாடுபடும் பணியினை மேற்கொண்டிருக்கிறோம். நமது பணி பயனற்றது. நமது ஆற்றல் தரமற்றது என்றால் நம்மைப் பற்றிய நினைப்பே ஆளவந்தார்களுக்கு எழாது.

இன்றோ நம்மைப் பற்றிய நினைப்பன்றி வேறு எந்த நினைப்பும் அவர்களுக்கு எழுவ தில்லை.

எங்கு சென்றாலும், எதைச் செய்து கொண்டிருந்தா லும், அவர்களின் மனதிலே நம்மைப் பற்றியே நினைப்பு!

இதைச் செய்தால் என்ன சொல்லுவார்களோ, அதைச் செய்தால் என்ன செய்வார்களோ, என்ற அச்சம் அவர்களைப் பிடித்து வாட்டுகிறது.

அதனால்தான், சுற்றிலும் சீமான்கள் வீற்றி ருக்க, இலட்சங்கள் காணிக்கையாகக் கிடைத்திருக்க, பத்திரிகைகள் புகழ்பாடி நின்றிருக்க, கொலுவிருக் கும் நிலையிலும் அவர்களுக்கு, 67000 அடி ஆழமுள்ள குழி தோண்டவேண்டும் என்ற 'அபாரமான, திட்டத்தின் மீது நாட்டம் செல்லுகிறது.

நம்மை ஒழிக்க அவர்கள் மேற்கொண்ட முன் னைய திட்டங்களைப் போலவே இந்தத் திட்டமும், பயனற்றதாகிப் போகும்.

முன்பு அவர்கள் நம்மை ஒழிக்கத் திட்டம் போட்டபோது இருந்ததைவிட இன்று அவர்கள்மீது மக்கள் கொண்டுள்ள கோபம் பன்மடங்கு வளர்ந் திருக்கிறது.

ஏதோ சோற்றுக்குக் குறைவில்லை—என்ற நிலை யில் மக்கள் முன்பு இருந்தார்கள்.

இன்று, சோறு! சோறு! என்று ஏன் கதறுகிறீர் கள், கிடைத்ததை வயிற்றில் போட்டு நிரப்பிக் கொள்ளுங்கள் என்று ஆளவந்தவர்கள் பேசிடக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

மக்கள் அடைந்திருக்கிற கோபம், கசப்பு, கொந்தளிப்பு ஒவ்வொரு நாளும் தெரிந்தபடி இருக் கிறதே, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக் கும், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள், வேலை நிறுத்தங்கள் என்பவை மூலம்.

சமூகத்தில் எந்தத் துறையினராவது மனக்கசப்பு இன்றி, குமுறல் இன்றி இருக்கின்றனரா?

கிளர்ச்சி என்றாலே அது வெறும் ஆலைத் தொழிலாளி செய்வது, நமக்கு அது ஒத்து வராது என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களெல்லாம் இன்று தத்தமது அமைப்புகள் மூலம், கிளர்ச்சி நடத்திடக் காண்கிறோமே.

சர்க்கார் அலுவலகப் பணியாளர்கள் சீறி எழுவதைக் காண்கிறோம்.

பாங்குகளில் ஊதியம் பெறுவோர் கிளர்ந்தெழு வதைப் பார்க்கிறோம்.

ஆறாத் துயரில் சிக்கியுள்ள ஆசிரியர்கள் 'ஆர்ப் பாட்ட அணிவகுப்பு' நடத்திடக் காண்கிறோம்.

யார் இந்த ஆட்சியிலே திருப்தியுடன் இருந்திட முடிகிறது.

நாடே எமது பக்கம்! என்று நாப்பறை ஒலித் துக் காட்டுகிறார்கள், ஆளவந்தார்கள்.

இல்லை! இல்லை!—என்ற முழக்கம் எழுப்புகின்ற னர், ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும்.

துப்பாக்கி பேசுகிறது! பிணம் விழுகிறது! பீதி கொண்டு மக்கள் ஓடிடக்கூட மறுக்கிறார்கள்.

வீரன் வீழ்ந்தான்! வீரம் வீழ்ந்துபடாது! ஒரு வன் மாண்டான்! மற்றவர் மாண்டிடாதிருக்கு மட்டும் அறப்போர் நடத்திடும்!?—என்றல்லவா முழக்கம் எழுப்புகிறார்கள்.

போலீஸ் போதவில்லை! இராணுவம் வரவழைக்கப்படுகிறது! ஏன்? கொந்தளிப்பு அடங்க மறுக்கிறது.

சாகவேண்டி நேரிட்டுவிடுமோ என்ற பயம்கூட இன்று மக்களிடம் வெகுவாகக் குறைந்து விட்டிருக்கிறது; குறைந்து கொண்டும் வருகிறது.

பலர் வாழச் சிலர் சாகலாம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட தத்துவமாகிவிட்டது.

அந்தத் தத்துவம் நடைமுறைக்கே வந்து விட்டதோ என்று சொல்லத்தக்க நிலைமைகள் உருவாகிகொண்டு வருகின்றன.

தம்பி! ஒன்று கூறுவர் காங்கிரசார்; கூறுகின்றனர்; இந்தக் கிளர்ச்சிகள் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே தூண்டிவிடுகின்றன—என்று.

எதிர்க்கட்சிகள் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; மக்கள் என்ன ஏமாளிகளா, அவர்கள் அறியார்களா; கிளர்ச்சியை ஒடுக்கத்தடியடி நடக்கும், துப்பாக்கியால் சுடுவார்கள் என்பதனை? தெரிந்தும் கிளர்ச்சியில் ஏன் ஈடுபடுகிறார்கள்?

அவர்கள் மனதிலே கொந்தளிப்பு இருக்கிறது, ஆகவே கிளர்ச்சி செய்திடும் துணிவு தன்னாலே பிறக்கிறது.

எந்த எதிர்க்கட்சியும், தடியடிபட வருவீர்! துப்பாக்கிச் சுட்டுக்கு பலியாக வருவீர்! என்று மக்களை அழைத்துவர முடியாது. ஆனால் நடைபெறும் கிளர்ச்சிகள், ஆட்சியின் அலங்கோலத்தின் விளைவு என்பதை உணராதவர்கள் எதிர்க்கட்சிகள் மீது பழிபோடுகின்றனர்.

இதனை முட்டாள்தனம் என்று கண்டித்திருக்கிறார் ஒரு பேரறிவாளர்; இன்றைய ஆட்சியாளர்களும் போற்றித்தீரவேண்டிய பேரறிவாளர்.

இலட்சியங்களுக்காகவும் பொருளாதார நிலை காரணமாகவும், புரட்சிகள் ஏற்படுகின்றன. அதிகாரத்தில் உள்ள முட்டால்தனமானவர்கள், தங்கள் எண்ணத்தோடு ஒட்டிவராத எதனையும் காண இயலாத கருத்துக் குருடர்கள் இந்தப் புரட்சிகளெல்லாம் கிளர்ச்சிகளால் விளைகின்றன என்று எண்ணிக் கொள்கிறார்கள். உள்ள நிலைமையில் திருப்தி ஏற்படாமல், மாறுதலை விரும்பி அதற்கான வேலை செய்பவர்களே கிளர்ச்சிக்காரர்கள்! ஆனால் ஆயிரம் ஆயிரம் மக்கள் ஒரு கிளர்ச்சிக்காரன் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்துவிட மாட்டார்கள். பெரும்பாலான மக்கள் பாதுகாப்பாக வாழ விரும்புபவர்கள்; இருப்பதை இழந்துவிட விரும்பமாட்டார்கள். ஆனால் பொருளாதார நிலைமை கெட்டு, அன்றாட வாழ்க்கையில் நலிவு வளர்ந்து, வாழ்வே ஒரு சுமை என்று ஆகிப்போய்விடுமானால், வலிவற்றவர்களும், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டுவிடுகிறார்கள்.

இன்று நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் இந்த நிலைமைக்குத் துரத்தப் படுகிறார்கள்! நடப்பது நடக்கட்டும்!—என்று துணிந்துவிடும் நிலைமைக்கு. இதை உணராமல், மக்களைச் சிலர் தூண்டிவிடுகிறார்கள் என்று பேசி வருகின்றார்கள் ஆளவந்தார்கள்.

இவர்கள் கருத்துக் குருடர்கள், அறிவற்றவர்கள் என்று கண்டித்திருக்கிறார்.

யார்? பண்டித ஜவஹர்லால் நேருவேதான். அவர் எப்போதோ உணர்ச்சி வயப்பட்டு பேசிவிட்ட ஆவேசப் பேச்சு அல்ல; நாடு அறியட்டும், உலகம் உணரட்டும்; வழி வழி வந்திடுவோர் பாடம் பெறட்டும் என்ற நோக்கத்துடன் உலக வரலாறு எனும் தமது நூலிலே எழுதி இருக்கிறார்.

நேருவின் வாரிசுகள் என்று கூறிக் கொள்பவர்களுக்கு, தம்பி! நான் இதனை நினைவுபடுத்தவேண்டி வருகிறது! என்ன செய்வது!!

Ideas and economic conditions make revolutions. Foolish people in authority blind to everything that does not fit in with their ideas imagine that rovolutions are caused by agitations. Agitators are people who are dis-contended with existing conditons and desire a change and work for it. But tens and hundreds of thousands of people do not more to action merely at the bidding of an agitator. Most people disire security above everything else, they do not want to risk losing what they have got. But when economic conditions are such that their day to day suffering grows and life becomes almost an intolerable burden then even the weak are prepared to take the risk.

நேருவின் இந்த மணிமொழியை உணர இயலாமல், கிளர்ச்சிகள் மூண்டுவிடுகின்றன—மூட்டிவிடப்படுவன அல்ல—என்பதை அறியாமல், சுட்டுத் தள்ளினால் மக்கள் சுருண்டு பிணமாகக் கீழே விழுந்தால் சமுதாயம் அடங்கிப் போய்விடும் என்று கருதிக் கொண்டு, சுட்டுத் தள்ளுகிறார்கள்.

ஆமாம்! ஐம்பது பேர் சுட்டுத் தள்ளப் பட்டார்கள்!!

என்று அவருடைய ஆயுட் காலத்திலேயே இதனை

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.


விடப் பெரிய சாதனை இல்லை என்று கருதுபவர் போலப் பேசினரல்லவா பக்தவத்சலனர்—"பாறை போல நின்றவர்"—அந்த நிலை எதைக் காட்டுகிறது?

சுட்டுத்தள்ளி கிளர்ச்சியை ஒடுக்குவோம் என்று இவர்கள் கொண்டுள்ள உறுதியை.

ஆகவேதான் தம்பி! 67000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது.

கழகத்தைப் போட்டுப் புதைக்க என்று பேசினர் ...ளை தவிர, அத்தனை ஆழமான குழி தோண்டப்பட வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதற்குக் காரணம், அவர்கள் குழியில் போட்டுப் புதைத்துவிட விரும்புபவை, கழகம் மட்டுமல்ல, வேறுபல உள!

காந்தியம்
ஜனநாயகம்
அறநெறி
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள்.

கிளர்ச்சியை ஒடுக்க வீழ்த்தப்பட்டவர் பிணம்!

இவ்வளவும் இருப்பதால்தான் அவ்வளவு ஆழமான குழி தோண்டவேண்டும் என்று தோன்றுகிறது போலும்.

> பிறரை வீழ்த்தக் குழிப்பறிப்போன், வெட்டிய குழியில் தானே வீழ்வான்

என்று எங்கோ படிந்ததாக நினைவு.

தம்பி! அவர்கள் குழி வெட்டிக்கொண்டே இருக்கட்டும், நீயும் நானும் அதிலே தள்ளப்படுவதாக இருந்தாலும், அந்தக் கடைசி நிமிடம் வரையில் மக்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லிக் கொண்டிருப்போம். உண்மைக்கு வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைத்தான் பார்த்து விடுவோமே.

அண்ணன்,

அண்ணாதுரை

# தாமரையாள் ஏன் சிரித்தாள்?

அன்று என்றும் போல் கதிரவன் ஓடிவந்தான் நீலத்திரையைக் கிழித்துக்கொண்டு, அவன் ஆசை நாயகியும் செவ்விதழ் மேனியை விரித்துக் காட்டி, செங்கதிரின் ஒளியில் நாணத்தை உமிழ்ந்து நின்றாள்.

என்றும் நடக்கும் நாடகம்தான் அன்றும் நடந்தது. ஆனால் முடிவில் கதிரவன் விடை பெறும் நேரத்தில் அழகுக் காதலி தாமரையாளுடன் பேச முனைந்தான்.

"கன்னல் தமிழ்ச் சாற்றினில் பாட்டிசைத்த பைந்தமிழ்க் கவிஞர்களின் உள்ளம் புகுந்து நீ காவியத்தின் அழகியாக திகழ்கின்றாய். ஆனால்...ஆனால்...இன்று நான் கூறுவதைக் கேட்டு நீ வருந்துவாய் என நினைக்கின்றேன். இருந்தாலும் கூறுகின்றேன் மனதை திடப்படுத்திக்கொள்"

என்று கூறி கதிரவன் தாமரையின் பொறுமையினை அதிகமாக சோதித்துக் கொண்டிருந்தான்.

"அப்படி என்னதான் சொல்லப் போகின்றீர்கள்"?

என்று கேட்டு தாமரையாளும் துடித்தாள்.

"ஒன்றுமில்லை! நாளை நீ என்னை பார்க்க மாட்டாய் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருந்தேன்"

என்று கூறிவிட்டு கதிரவன் மறைந்து விட்டான் நீலத் திரைக் கடலில்.

தாமரைக்கு ஒன்றும் புரியவில்லை. என்றும் இல்லாமல் இன்று மட்டும் ஏன் இப்படி பேசிவிட்டுப் போகின்றார். அவர்பிறந்து என்னைக் கண்டதும் முதல் என்னுடன் இன் முகம் காட்டி இளமையுடன் கொஞ்சி நின்றாரே! இன்று என்ன வந்து விட்டது என்னை வெறுத்து விட்டுப் போகின்றார்?

என்று அந்த பூவையின் உள்ளம் புழுவாய்த் துடித்தது.

பாவம்! தாமரையாள் இந்த புதிர்களைத் தாங்க முடியாமல் தவித்தாள். தவிப்பால் வந்த சோர்வோ அல்லது மாலைதான் வந்து விட்டதென்ற உணர்வோ என்னவோ கண்களை மூடிக் கொண்டாள்.

அன்று நீலத் திரையில் அரும்பிய தாரைகள் தாமரையைக் கண்டு கண்சிமிட்டி அறிய இரகசியம் பேசிக் கொண்டனர் போலும்.

அனல் ஒளி அகற்றி அரும்பிய அம்புலிக் கணவனைக்காண ஆயிரம் அல்லியர் அரும்பி நின்றனர்.

கவிஞர் பலர் தன் இடையைக் கவியினில் ஏற்றினர் என்ற காரணத்தாலோ என்னவோ தன் தண்டிடையை வளைத்து தமிழகத்துப் பாவைபோல் நாணத்தால் தலைகுனிந்து மலர்ந்து நின்றாள்.

இப்பொழுது புரிந்து விட்டது தாமரையாளுக்கு!

"எல்லாம் இந்த அல்லி என்ற கள்ளியால் வந்த வினை! என் காதலன் விடைபெறும் நேரத்தில் மட்டும் இந்த கள்ளி வராமல் இருந்திருந்தால் இன்று இவர் இப்படி பேசிவிட்டுப் போயிருக்க மாட்டார்! தினமும் என்னழகைச் சுவைத்துக் கொண்டு இருந்த அந்த கதிரவனுக்கு இந்த அல்லியின் அழகைக் கண்டதும் கள்ளக் காதல் பிறந்து விட்டது போலும்!"

என்று தாமரையின் மனதிலே ஆயிரம் எண்ணங்கள் மலர்ந்தன.

இரவும் ஓடி மறைந்தது. ஆனால் அதற்கு பதிலடி கொடுப்பதைப் போல ஏன் அந்தக் கதிரவன் இன்னும் வரவில்லை.

தாமரையின் ஏக்கம் அதிகரித்தது. நீல வானத்தில் எட்டுதிக்கும் கருமுகிற் காளைகள் கதிரவனை மறைத்து விட்டனர். காதலன் அணைப்பிலாததால் அவள் மேனி அன்று பொலிவிழந்து காணப் பட்டது.

திடீர் என்று ஏதோ பனித்துளிகள் தன்மீது விழுவதைப்போல் ஒரு உணர்வு தாமரையாளுக்கு, கண்களை திறந்து பார்த்தாள். அவளால் நம்பவே முடியவில்லை!

"ஏன் இப்படி இந்தக் கருமுகிற் காளைகள் கூட்டம் கூட்டமாக ஓடி வருகின்றனர்?

மணப்பந்தலில் தெளிக்கும் பன்னீரைப் போல ஏதோ நம்மீது தெளிக்கின்றனரே இந்த முரட்டு முகிலர்கள்! வேலி இல்லாத பயிர் என்றால் மேய்வதற்கு மாடு உண்டு என்று எண்ணி விட்டனர்போலும் மேகமெனும் மோகத்தால் என்னைக் கவரப் பார்க்கின்றனரோ?"

**கீதாமணாளன்**

இது காதலனின் வருகைக்காக ஏங்கி நிற்கும் தாமரையாளுக்கு முகிலென்ற முரடரைக் கண்டதும் கொண்டபயம்!

ஆனால் புவியில் துடிக்கும் பூவையின் காதல் புலம்பல், விண்ணில் தவழும் கதிரவனுக்கு எங்கே கேட்கப் போகின்றது.

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

என்று பாட்டிசைத்த இந்நாட்டிலே கேவலம் பொருளுக்கும் பொன்னிற்கும் காதலை கைவிடுகின்றனர் என்றால் இந்த கதிரவனுமா இப்படி என்னை ஏமாற்ற வேண்டும்? ஏமாற்றுவதும் ஏமாறுவதும், இந்த மானிடர் இனத்தில் தான் என்றால் நம்மிடத்தில் கூடவா? சீ...சீ...என்ன உலகம் இது! பூக்களில்கூட பெண்ணாய்ப் பிறப்பது தவறு என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன். இரக்கமில்லாமல் நம்மை ஏமாற்றுகின்றனர் என்றால் இந்த கதிரவனுமா நம்மை இப்படி ஏமாற்ற வேண்டும்!"

என்று தாமரையின் மனதில் கற்பனை வரிகள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

கற்பனையில் திளைத்த அவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை. இரவும் மறைந்தோடியது. முரட்டு முகிலர்கள் முண்டியடித்துக் கொண்டு ஓடி மறைந்தனர் மூலையிலே.

மறுநாள் என்றும் இல்லாத புத்துணர்ச்சியுடன் பொலிந்து நின்றான் பகலவன்.

தாமரையும் கண்டாள் தன் காதலனை!

செவ்விதழ்களை விரித்து மலர்ந்து நின்றாள்,

செங்கதிர்களை வீசிவாரி அணைத்துக் கொண்டான் செந்தாமரையாளை!

ஒருநாள் இடைவிட்டு இன் சந்தித்தனர் காதலர்!

அங்கே தோன்றிய கொஞ்சலும், குழைவும்...அதை நான் எப்படி கூறுவது?

இன்பத்தை உணரத்தான் முடியும் அதை விளக்க முடியுமா?

தாமரையாள், நேற்று தன் காதலன் பிரிவால் ஏற்பட்ட ஏக்கத்தை நினைத்தால் — அவளுக்கே சிரிப்பு வந்தது. ஃ

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

பாலுவின் ஆரவார ஆர்ப்பாட்ட உணர்ச்சிகள் அவளைக் கை கழுவிவிட்டு ஓடி ஒளிந்து கொண்டன. அவளது குற்ற எண்ணங்கள் இருக்குமிடந் தெரியா மல் ஓடின. யாருடைய உதவியும் இன்றி இரங்கத் தக்க நிலையில் வெயிலில் விழுந்த மூட்டைப்பூச்சி போலச் சுருண்டாள்.

"பாலு, இப்போது மனங்குமுறி அழுகிறாயே சற்றுமுன் எப்படி இருந்தாய்? இந்த மூளை இதற்கு முன் இருந்ததா? இந்த அழுகையை நாளைக்கு நடத்தலாம். இதோபார். இந்தத்தாளில் ஒரு கையெழுத்தைப்போடு. உம்..."

திருமாவளவன் எழுதி வந்த மூலப்படிவத்தைக் காட்டிய முகிலன், "இன்று நடந்தவை முழுதும் எழுதப்பட்டிருக்கிறது. இதில் உன் கையெழுத்து கிடைத்துவிட்டால்; உன்னை நான் காப்போடு வீடு சேர்ப்பேன். இல்லையென்றால் சட்டப்படி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவுக்கு ஆகவேண்டியவற்றை ஏற்பாடுசெய்வேன்." எனக் கூறிக்கொண்டே எழுந்து விலகினான் முகிலன்.

அதற்குள் திருமாவளவன் அக்கட்டிலில் அமர்ந் திருந்த நிலையில் பாலுவை ஒளிப்படும் பிடித்துக் கொண்டான்.

அதிர்ந்தாள் பாலு!

இரவுக்கையில்லாத இரவு உடையில் போராடி அலங்கோலமுற்ற அந்தக்கோலத்தில் ஒளிப்படம் எடுத்தது கண்டு ஆற்றாமையும் சீற்றமும் மூண்டது.

"முகிலன், ஏன் படம் பிடித்தாய்?"

"ஏன் நீ இங்கே வந்தாய்? ஏன் வழுதியோடு கள்ளக்காதல் நாடகம் ஆடினாய்? ஏன் அவன் உன்னை இந்நிலைக்கு ஆளாக்கிவிட்டு மேலாடை இல்லாமல் ஓடினான்? குண்டர்கள் என்னை வற்புறுத்தினார்கள்? இதெல்லாவற்றையும் போல இதுவும் ஒன்று அவ்வளவுதான்!

பாலுவின் மூளை விழித்துக் கொண்டது.

"ஆ! முகிலன், என்னை வழக்கில் சிக்கவைத்து விடாதீர்கள். என்மானத்துக்கு மாசு வந்தால் நான் வாழமாட்டேன். ஐயோ! நான் நான்கு பேருக்கு முன்னே தலைநிமிராதபடி செய்து விடாதீர் கள். முகிலன்...முகிலன்...என் அத்தானாக உங்களை அன்போடு மதித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளு கிறேன். எனக்குத் துன்பம் உண்டாக்கி விடாதீர் கள். நீங்கள் சொல்கிறபடி கேட்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் அப்படியே நடப்பேன். இது உறுதி. உறுதி. உறுதி. நான் மனம்நொந்து போய்க் கிடக்கிறேன் புழுவைவிட இழிந்த நிலையிலிருக் கிறேன். உங்கள் ஆண்மையை இந்தப் பேதை யிடமா காட்டவேண்டும்? என்னை வாட்டி வதைக் காதீர்கள். உங்களுக்குக் கோடி நன்மைகள் உண்டாகும். முகிலன், இரக்கம் காட்டுங்கள் முகிலன். என்னை வாழவிடுங்கள் முகிலன்."— அவன் கால்களை இருகைகளாலும் பற்றியவாறு கண்ணீர் வழியக் கெஞ்சினாள்.

"இப்போது நடந்திருக்கும் குற்றங்களுக்குக் காவலரிடம் உன்னை ஒப்படைத்தால் போதும். உன்னை அப்படியெல்லாம் இழிவு செய்ய என்னுள் ளம் இசையவில்லை உன்னால்தான் புகழேந்தியின் வழக்கில் சிக்கல் வலிவடைந்தது. உன் எதிர்ப்பும் சூழ்ச்சியும் இல்லாமலிருந்தால், அவன் வெற்றி பெற்றிருப்பான். நான் சொன்னபடி நீ கேட்க வில்லையென்றால் இப்போதே உன்னைக் காவல் நிலை யத்தில் ஒப்படைத்துச் செய்யவேண்டியவற்றை முறையாகச் செய்துவிடுவேன். நீ ஒருவகையிலும் உருப்படவேமாட்டாய் என்பதை மறக்காதே. நிலைமைமீறிப் போய்விட்டால் நச்சினார்கினியரோ, அடியார்க்கு நல்லாரோ உனக்கு மறைமுகமாகக் கூட உதவிசெய்ய மாட்டார்கள்! நானும் எல்லாரை யும் வளைத்துத்தான் வழக்கை வலிவாக்குவேன். என்ன சொல்கிறாய்? என் பேச்சிப்படி நடிக்கிறாயா? உறுதிகொடுப்பதோடு இல்லாமல் உண்மையாகவும் நடக்கவேண்டும். எனக்குக் கொஞ்சம் ஐயப்பாடு உன்னிடத்தில் தோன்றினாலும் உன் படத்தோடு எல்லாச் செய்திகளும் அம்பலமேறும். இது உறுதி. மறக்காதே." என்றான்.

"ஐயோ! அப்படியெல்லாம் செய்யாதீர்கள் முகிலன். நீங்கள் சொல்கிறபடி நடக்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள். எதில் கையெழுத்துப் போடவேண்டும்?" எனக் கண்ணீரோடு வினவியவள், திருமாவளவன் எழுதிக் கொடுத்த தாளை வாங்கிப் படித்துப் பார்த்து அதன்படி எழுதிக் கையெழுத்தும் இட்டாள்.

"பாலு, உன்னைத் துரத்தி வந்த முரடர்கள் யார்? அவர்களுக்கும் உனக்கும் எந்தவகையில் தொடர்பு? என்ன குழப்பம்?"

அதைக்கேட்டு மனங்குன்றி ஆற்றாமையால் விம்மினாள். முகிலன் மடியில் முகம்புதைத்துக் கொண்டு 'கோ'வெனக் கதறி அழலானாள். அவள்

ஆற்றுமைகண்டு முகிலனுள்ளம் கசிந்தது. உடனே அவனறிவு எச்சரித்தது. 'இளகிவிடுவது பெண்ணின் வலிமைக்கு உதவி செய்யும்' என விழிப்புற்றுன்.

"பாலு, இன்று மனம் குமுறுகிருயே! மற்றவர் மனம் குமுறுவதைப்பற்றி நீ அணுவளவாவது எண்ணி இரக்கப்பட்டதுண்டா? உன் தகுதி, நிலை, வாழ்க்கை ஆகியவற்றை உணராமல் கண்டவர்களோடு நாகரிகம், நட்பு, விருந்து எனக் கூறிப் பழகி விடுவதால் பாழ்பட்டுத்தானே ஆகவேண்டும்? முரடர் சிலர்மட்டுமா? பலர் வருவார்கள்! இதனுல் தான் கட்டுப்பாடு, அடக்கம், பெண்மை இருக்க வேண்டுமென்று பெரியவர்கள் சொல்லியிருக்கின்றனர். இதையெல்லாம் ஏன் எதற்கென இகழ்ந்தால், இதைப் போன்ற நிலைகள் வந்தேதான் தீரும்" எனக் கூறிக் கொண்டிருக்கும் போதே வெளியே சென்ற திருமாவளவன் உள்ளே வந்தான்.

"முகிலா, சென்னைக்குப் போகலாமா?" எனக் கேட்டான்.

"பாலு, உடைகளை உடுத்திக் கொண்டு புறப்படு." என்க் கூறிய முகிலன், "வளவன் சென்னைக் குத்தான் போக வேண்டும்."

"முகிலன், நானும் வருகிறேன். இங்கே விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்" எனக் கெஞ்சினுள்.

"நீ வழுதியோடு வந்தாய். அவர் உன்னைத் தேடமாட்டாரா பாலு?" எனக் குத்தலாக முகிலன் கேட்டான்.

"ஐயோ! ஐயோ! என்னறிவைச் செருப்பால டிக்க வேண்டும்! தூ! அந்தத் தடியன் நான் இருக்கிறேனு, செத்தேனு என்று கூடக்கவனிக்காமல், கட்டின துண்டோடு ஒரே ஓட்டமாக ஓடினனே... சீ! சீ!...எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். உம்...இவனையும் நம்பி வந்தேனே!..." என அழுதாள்.

"உம் போகலாம்." எனக் கூறிவிட்டு வெளியேறிய முகிலனும் திருமாவளவனும் சில இடங்களை ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர். வீட்டமைப்பு, சூழ்நிலைகளை நன்ருக உற்றுநோக்கியபின் வழுதியின் மேல்சட்டை, கால்சட்டை, கைக்குட்டை, காலணி, முதலியவற்றையும் எடுத்துக் கொண்டனர்.

பாலு உடையைந் சீர்செய்து கொண்டாள். ஆனுல்...

தலைமயிரைக் கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டாள்.

கண்ணீர் ஊற்றெனச் சுரந்து வழிந்து கொண்டிருந்தது.

முகிலன் புறப்பட்ட பாலுவை நேருக்குநேர் நிமிர்ந்து நிலைத்து நோக்கினுன்.

அவள் கூசிக் குறுகித் தலைகுனிந்தாள்; உடம்பில் சிலிர்ப்பு ஓடியது.

"பாலு, வருந்தாதே உன்மேல் எனக்குக் சீற்றமோ, பகையோ இல்லை. ஆனுல் உன் நடத்தை மேல் எனக்கு எல்லையற்ற சீற்றம் உண்டு. இனி, நல்லபடி இருக்க முயற்சி செய்" என்முன்.

(வளரும்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூகையினைக் கொன்றவனே!
குலமகனே! வாவா!
கொடும்பாம்பைக் குழிதோண்டிப்
புதைத்தவனே! வாவா

என வாழ்த்துப்பாடி வரவேற்கும் மாட்சிதான் என்னே!

ஊராரின் வரவேற்பு முடிந்தது. உள்ளங் கவர்ந்த உத்தமத்துணைவியரின் வரவேற்பு தொடங்குகிறது. வெங்களம் சென்று வீணர்களைக் கொன்று வெற்றியுடன் திரும்பி வந்துள்ள அருமைக் கணவன்மாரை அகமும், முகமும் மலர வரவேற்கும் காட்சியினைக் கற்பனை நயம் தோன்ற நமக்கு காட்டுகிருர் கவிஞர்.

"மலைமீது தவழ்கின்ற
மேகத்தைப் போன்ற
மார்மீது தவழ்கின்ற
மேலாடை நோகச்
சிலைபோன்ற கணவன் மார்
நெடுமார்பில் விழுந்து
சிங்கார மங்கைமார் வரவேற்ருர்
எங்கும்!

மற்றும்,

"தெங்கிள நீர் மார் பழகால்
தேனூறும் வாயாழகால்
தித்திக்கின்ற
செங்கரும்புப் பேச்சழகால்
சேல் விழியின் வீச்சழகால்
வரவேற்ருர்கள்."

என சீனத்துப் பரணியின் கடைத் திறப்பினைப் புதுமை மணம் கமிழப் பொலிவுடன் பாடியுள்ளார்.

அடிக்கரும்பின் சுவை நுனிக் கரும்பில் இருப்பதில்லை. ஆனுல் பலாவின் சுளைகள் ஒன்றுக் கொன்று சுவையில் குறைந்ததோ? சுவையில் கரும்பு போல் இல்லாது, பரணி முழுவதும் ஒவ்வொரு பாடலும் சுவை குன்ருது தமிழ் மணம் கமழ்கின்றது. இதுபோல் தேசிய உணர்வுகளை ஊட்டும் நூல்கள் கவிதை வடிவில் எண்ணிக்கையில் குறைந்த அளவே நம்மிடம் காணக்கிடக்கின்றன இந்நூலை ஆக்கியதிலிருந்து கவிஞரின் தேசப்பற்று வெள்ளிடைமலையென, உள்ளங்கை நெல்லிக் கனி எனக் காணக்கிடக்கின்றது. நூலை படித்து முடித்த பின்,

'பரணிக்கு ஒரு பாலசுப்பிரமணியன் என்று கூறத் தோன்றும் படி நூலை எழுதிய அவரைப் பாராட்ட உள்ளம் தூண்டுகிறது.

நூல்:

**சீனத்துப்பரணி**

ஆசிரியர்:
மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,
கிடைக்குமிடம்:
**ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்,**
கோர்ட் ரோடு,
நாகர்கோவில் - 1.
விலை ரூபாய்: 1-00 (ஒன்று)

# செய்தித் திரட்டு

**தமிழக அரசு ஊழியர்களின் நடத்தைப் பற்றி புதுவிதிகள்:**

1973-ம் வருடத்திய தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகளை தமிழ்நாடு அரசு வகுத்திருக்கிறது. 1960-ம் வருடத்திய சென்னை அரசு ஊழியர் நடத்தை விதிகள் ரத்து செய்யப்பட்டு அவற்றுக்கு பதிலாக இந்தப் புதிய விதிகள் அமுலுக்கு வரும். 1960-ம் வருடத்திய விதிகள் 23 உட்பிரிவுகளையும் உபபிரிவுகளையும் கொண்டது. 1973-ம் வருடத்திய விதிகள் 26 உட்பிரிவுக்களையும், அவற்றின் உபபிரிவுகளையும் கொண்டதாக உள்ளது.

அரசு ஊழியர்கள் போதைதரும் பானங்களை உட்கொள்ளுவது, சங்கங்களில் சேருவது, ஆர்ப்பாட்டங்களில் பங்குகொள்வது பற்றி 1973-ம் வருடத்திய விதிகள் குறிப்பிடுகின்றன.

**அமெரிக்க அரசின் உதவி நிலைய அலுவலகம் இந்திய அரசிடம் ஒப்படைப்பு:**

அமெரிக்க அரசு தனது உதவி நிலைய (யு. எஸ். ஏ. ஐ. டி.) அலுவலகத்தையும், ஊழியர் குடியிருப்பு [illegible]ளையும் இந்தியச் சுற்றுலா [illegible]ர்ச்சி நிறுவனத்தின் உபயோ[illegible]துக்காக இந்திய அரசின் மத்திய பொதுப்பணிதுறை வசம் ஒப்படைத்தது.

**ஆப்கான் தூதர் ஐ. நா. வில் புகார்:**

பக்டூனிஸ்தான் விஷயத்திலும், பலூச்சிஸ்தான் விஷயத்திலும் பாகிஸ்தான் தவறான கொள்கையைக் கையாளுகிறது என்றும் அதனால்தான் ஆப்கானிஸ்தானுக்கு மிகவும் சங்கடம் ஏற்படுகிறது என்றும் ஆப்கான் தூதர் ஐ. நா. வில் புகார் கூறினார்.

**பிரான்சு அணு சோதனை நீடிப்பு:**

தென்பசிபிக் கடலில் பிரான்சு நடத்தி வரும் அணுகுண்டு சோதனை தொடர்ந்து நடத்தப்படும் என்று பிரான்சு பிரதமர் தெரிவித்தார். பாரிசில் நடைபெற்ற அரசு ஊழியர் கூட்டமொன்றில் அவர் பேசுகையில் சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஆபத்தில்லாமலும், உயிர் சேதம் இல்லாமலும் இச்சோதனைகள் நடத்தப்படும். தேசிய பாதுகாப்பு வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

**தமிழகத்தில் நெல்லெவி ரத்து:**

கொள்முதல் விலை உயர்வு.

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர, இதர மாவட்டங்களனைத்திலும் நெல்லெவி ஏற்பாடு நீங்கியது. தமிழக முதல்வர் இத்தகவலை நிருபர்களிடம் அறிவித்தார். மத்திய சர்க்கார் முடிவுக்கு ஏற்பகுவிண்டாலுக்கு ரூ 70 ஆக லெவி விலையை மாநில அரசு உயர்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

**மத்திய கிழக்கில் போர் மூண்டது:**

எகிப்திய துருப்புகள் சூயஸ் கால்வாயைத் தாண்டி, இஸ்ரேல் வசமுள்ள பகுதியில் நுழைந்தனர். போர் மூண்டதற்கு அரபு நாடுகள் காரணமென்று இஸ்ரேலும், இஸ்ரேல்தான் காரணம் என்று அரபு நாடுகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்ளுகின்றன. 1967ம் வருஷம் போருக்குப்பின், மீண்டும் பலத்த போர் இப்போது நடக்கிறது.

**இலங்கை அரசு இறங்கி வருகிறது:**

தமிழர் ஐக்கிய முன்னணியுடன் ஸ்ரீ லங்கா பிரதம மந்திரி திருமதி பண்டார நாயகா விரைவில் பேச்சு வார்த்தை நடத்துவார். அடுத்த வாரம் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர்களும் பிரதமரும் சந்திப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சட்ட மறுப்புக் கிளர்ச்சியைத் தமிழர் ஐக்கிய முன்னணி நிறுத்தி வைத்திருக்கிறது. தமிழர் ஐ. மு. வின் 3 கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்று, அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

**சோவியத் விண்வெளிகோள் பூமி திரும்பியது:**

1975-ல் மேற்கொள்ளப்படவிருக்கும் யு. எஸ். - சோவியத் கூட்டு விண்வெளிப் பயணத்துக்குப் பூர்வாங்கமாக அனுப்பி வைக்கப்பட்ட சோவியத் விண்வெளிக் கோள் (சோயுஸ் 12) இரு விண்வெளி விஞ்ஞானிகளுடன் பூமிக்கு இன்று திரும்பிவிட்டது. விண்வெளி விஞ்ஞானிகள் லாஸரேவ் ஜலேக் மாரோவ் சுகமாக இருப்பதாக டாஸ் கூறியது.

தொகுப்பு: **கே. எஸ். ராஜன்**




## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

### குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

# அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
# இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86. திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.